மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 1974 டிசம்பர் முடிய ரூபாய் 9.21 லட்சம் செலவு செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்ற நிலையில் இன்னும் பல பேர் பக்கத்திலே குடிசை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான இட வசதி இல்லையா ? அதை எவ்வாறு மறுபடியும் அவர்களுக்குக் கொடுக்க விருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்தப் பகுதியிலே இருந்தவர்களை வெளியேற்றி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. பூச்சு வேலை நடக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தாம்பரத்தில் வீட்டுவசதி வாரிய மனைகள் ஒதுக்கீடு.

*693 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கடந்த ஆண்டில் தாம்பரத்தில், வீட்டு மனைகள் ஒதுக்கப்படுவதற்கான விண்ணப்பங் கள் கோரியதா ?

(இ) ஆம் எனில், எத்தனை விண்ணப்பங்கள் பெறப்பட்டன?

(உ) எத்தனை பேர்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விக்கு இடமில்லை.

கோயம்புத்தூரில் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலங்கள்.

*694 வினா.—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் டவுன், லிங்கையன் தோட்டம் T.S.No. 1194/1, 1195/1-களில் அமைந்துள்ள நிலம், கோவை வீட்டு வசதி வாரியத்தின் கோவை கிளை 1967-ம் வருடத்தில் எடுத்துக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், நிலச் சொந்தக்காரர் நிலக்கிரயம் கொடுக்கப்பட்டுவிட்டதா ?